1979-8-15 PERIODICALS DIVISION LIBRARY

# என். எம். பெரேரா காலமானார்

★ பக்கங்கள் 8 விலை சதம் 40

ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 ஆடி 30 தம்மான் 21 இதழ் 184

யாழ்ப்பாணம் புதன்கிழமை 15-8-79



(கொழும்பு)

லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர் கலாநிதி என்.எம் பெரேரா நேற்று இரவு கொழும்பு பெரியாஸ்பத்திரியில் காலமானார் என்ற செய்தியை 'ஈழநாடு' வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறது.

உழைக்கும் பெரும் அரசியல்வாதியும், முன்னாள் நிதியமைச்சருமான கலாநிதி என். எம். பெரேரா கடந்த வியாழக்கிழமை கடும் சுகவீனமுற்று கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தபோதும் கடந்த சனிக்கிழமையிலிருந்து உணர்விழந்த நிலையிலேயே இருந்துவந்தார்.

தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு போராடிவந்த என். எம். தொடர்ந்து பலமுறை இலங்கைப்பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு பதவிவகித்து வந்தார்.

# காங்கிரஸ்குழு - அமிர் சந்திப்பு

# தமிழர் பிரச்னை: தெளிவாக விளக்கப்பட்டது

## தொண்ணூறுநிமிடப்பேச்சில் 'சிவா'வும்கலந்துகொண்டார்

(நமது நிருபர் எஸ். மகாலிங்கசிவம்)

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க பாராளுமன்றக்குழுவினர் நேற்றுக்காலை திர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கத்தைச் சந்தித்து உரையாடியபோது; இலங்கைத் தமிழ்மக்களின் முக்கிய பிரச்னைகள் பற்றியும் தமிழ்மக்கள் எவ்விதமாக தனிநாடு' கோரிக்கைக்குத்தள்ளப்பட்டுள்ளனர் என்பதுகுறித்தும் தெளிவாக விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது.

பாராளுமன்ற கட்டிடத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் தமிழர் விடுதலை கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும் கலந்து கொண்டார்; பன்னிரண்டு அமெரிக்க காங்கிரஸ் அங்கத்தவர்களுடனான இச் சந்திப்பு, சுமார் தொண்ணூறு நிமிடநேரம்வரை நடைபெற்றது

### அமைச்சர்களுடன் சந்திப்பு

ஐந்துநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்திருக்கும் இத்தூதுக்குழுவினர் நேற்று முன்தினம் நீதியமைச்சர். திரு. கே. டபிள்யூ தேவநாயகம் வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ ஸி எஸ். ஹமீத் ஆகியோரைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர்.

நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகத்தைத் தூதுக்குழுவினர் சந்தித்தபோது, இலங்கை அரசியல் அமைப்புச் சாசனத்தை அன்பளிப்பாக வழங்கி, அரசியல் அமைப்புச் சட்டத்தில் சிறுபான்மையினருக்கு அரசாங்கம் வழங்கியுள்ள பல்வேறு உரிமைகள், சலுகைகள், மற்றும் திட்டங்களை குறித்தும் விரிவாக விளக்கினார்.

### நேற்றைய சந்திப்பு

எதிர்க்கட்சித் தலைவருடன் இடம் பெற்ற நேற்றைய சந்திப்பில், தமிழ் மக்களை எதிர்நோக்கியுள்ள பல்வேறு முக்கிய பிரச்னைகள் குறித்தும், 1976ல் தனி நாடு கோரிக்கைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்ட நிலைபற்றியும் அமெரிக்க காங்கிரஸ் தூதுக் குழுவினரிடம் தாம் விளக்கமாக கூறியதாக எதிர்க்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் நேற்று பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

"இந்நாட்டில் தமிழ் மக்களுக்கும் பிரச்னைகள் இருக்கின்றன, அவை 'தீர்த்துவைக்கப்பட வேண்டும்' என்று பகிரங்கமாகத் தெரிவித்த கட்சி ஐக்கிய தேசிய கட்சிதான் என்றும். ஆனாலும் ஆட்சியிலுள்ள அக்கட்சி தமிழர் பிரச்னை எதனையும் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், அதே நேரத்தில் இப்பொழுதுதான் தமிழர் 'பிரச்னையைத் தாங்கள் தீர்த்து வைக்கப் போவதாகக் கூறி, நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்றும் இவற்றைப் பொறுத்திருந்துதான் தாங்கள் பார்க்கப் போவதாகவும் தூதுக்குழுவினரிடம் தாம் தெரிவித்ததாக திரு அ. அமிர்தலிங்கம் நிருபர்களுக்கு தெரிவித்தார்.

### தூதுக்குழுவினர் சபைக்குச்சென்றனர்

திரு. லெஸ்டர் வூல்புக் தலைமையில் திரு. அமிர்தலிங்கத்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட குழுக்கூட்டம் 22ல் கொழும்பில் நடைபெறும்

(கொழும்பு)

யாழ். மாவட்டக் குழுக்கூட்டம் மீண்டும் இம்மாதம் 22ம் திகதி கொழும்பில் யாழ் மாவட்ட அமைச்சர், திரு. உக்குபண்டா விஜயக்கோன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டணி எம். பிக்கள் அனைவரும் கலந்து கொள்வார்கள் என்று ஊர்காவற்றுறை எம் பி பண்டிதர் கா பொ இரத்தினம் தெரிவித்தார். (கொ)

## தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரியில்

# பூரணத்துவம் வாய்ந்த புற்றுநோய் சிகிச்சை நிலையம்

### அரசின் அதிகாரம் பெற்றுத்தருவதாக யாழ்.மாவட்ட அமைச்சர் உறுதி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரியில் பூரணத்துவம் வாய்ந்த புற்றுநோய் சிகிச்சை நிலையமொன்றை அமைப்பதற்கு அரசின் அங்கீகாரத்தைப் பெற்றுத் தரவேண்டும் என்று தம்மைச் சந்தித்த யாழ். மாவட்ட புற்றுநோய் சிகிச்சை நிலையம் நிறுவுவது தொடர்பான சபைத் தூதுக்குழுவுடம் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. உக்குபண்டா விஜயக்கோன் உறுதியளித்துள்ளார்.

இச்சந்திப்பு நேற்றுக்காலை யாழ். செயலகத்தில் நடைபெற்றது. தூதுக்குழுவில், யாழ். ரோட்டறிக்கழகத் தலைவரும், பதில் நீதவானுமாகிய திரு. கே கனகரட்ணம், லயன்ஸ் கழகத்தலைவர் டாக்டர் எஸ். சபாரெட்ணம், வடமாகாண புற்றுநோய் சிகிச்சை நிலையத் தலைவர் டாக்டர் ரி சண்முகநாதன், வைத்திய நிபுணர் ஜெகா பசுபதி, வைத்திய கலாநிதி ஜே வி பீலிட்ஸ் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். சந்திப்பின்போது யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு யோகேந்திரா துரைசுவாமியும் கலந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் நிறுவுவதன் அவசியம் பற்றி நீண்டதொரு மகஜரொன்றையும் இச் சந்திப்பின்போது தூதுக்குழுவினர் மாவட்ட அமைச்சரிடம் கையளித்தனர். (கொ)

# 'இலங்கை-இந்திய நட்புறவு மேலும் வளரவேண்டும்'

## இந்தியத் தூதுவர் செய்தி

(கொழும்பு)

'இந்தியசுதந்திரதினத்தை ஒட்டி இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. தோமஸ் ஏபிரஹாம் விடுத்துள்ள செய்தி:

"இந்தியா சுதந்திரமடைந்து இன்றுடன் 32 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

கடந்த வருடத்தில் இந்திய இலங்கை நட்புறவு மிகவும் நெருக்கமடைந்துள்ளது. இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் இந்திய விஜயமும் முன்னாள் இந்தியப்பிரதமர் திரு.மொரார்ஜி தேசாயின் இலங்கை விஜயமுமே இதற்கு உறுதுணையாக இருந்துள்ளன.

'எதிர் பாராத நேரத்தில் எமது இரு பிரதமர்கள் மறைந்ததனால் ஏற்பட்ட நெருக்கடிகளைச் சமாளித்த வேளையிலும், ஜனநாயக ரீதியில் மகத்தான தேர்தல் வெற்றியினால் அரசாங்க அமைப்பில் மாற்றம் ஏற்பட்ட நிலையிலும் இப்போது கட்சிக்குள் ஒருமைப்பாடும் ஏற்பட்டுள்ள வேளையிலும் அரசியல் அமைப்புச்சட்ட அமைப்பை மீறாத வகையில் அமைதியாகவும் ஒழுங்காகவும் எமது தேசியத் தலைமையில் மாற்றங்களை ஏற்படுத்தியது ஒரு சாதாரண சாதனை அல்ல.

இந்நிலையில் எதிர்காலத்தில் எமது இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவு மேலும் வளர்ந்து பலமடையுமென்பதில் சந்தேகமில்லை."

## எம். ஜி. ஆர். 'ராஜ்' சந்திப்பு

சென்னை, ஆக 14

'ஜனதா-எஸ்' கட்சித் தலைவர் திரு ராஜ்நாராயன் இன்று தமிழக முதல் அமைச்சர் திரு. எம் ஜி. ராமச்சந்திரனை சந்தித்து சுமார் ஒரு மணிநேரம்வரை பேச்சு நடத்தினார். (இ)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

PHANTOM TEMPAIR AIR CONDITIONER 1½ TON நல்ல நிலையில் விற்பனைக்குண்டு, எம்மோ ஸன்ஸ், 79, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 404. (3296)

## விற்பனைக்கு

2 ஸ்ரீ 8000 வோக்ஸ்வாகன் கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு 68, கலட்டி அம்மன் ரோட், யாழ்ப்பாணம். 3298

## கோட்டு விற்பனவு விளம்பரம்

M B 14164

சிவரத்தினம் சபாநாதன்,
வேலணை கிழக்கு, வேலணை.

வழக்காளி

எதிராக

சின்னத்துரை விசுவலிங்கம்,
வேலணை கிழக்கு, வேலணை.

எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் M B 14164-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1979-ம் ஆண்டு ஆவணி மாதம் 21-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-45 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

ரூபாய் 5816 சதம் 87 பின் 29-10-73 தொடக்கம் 1-12-76 வரை ரூபா 4,650/- 1½% வட்டியும் பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 602 சதம் 27ம் முழுத்தொகையிலும் ரூபா 5000/- கழித்து மிகுதி முழுவதும்

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணை கோவிற்பற்று வேலணை கிழக்கு இறை இலகு நின்றம் நெற்பரப்பு 20 இதில் சொரியலாய் நெ. பர 4 நாங்களும் உடன் பங்காளர் தாமாக நெடுங்காலமாக நெ. பர (4) நான்கு.

மேற்படி இலகு நின்றம் நெ பர 20ல் சொரியலாய் 1/3 மூன்றில் ஒரு பங்கு நானும் உடன் பங்காளிகளுமாக ஆட்சி பண்ணி வருகின்றபடியால் நற்புறமாக நெ பர (6) ஆறு குளி 8 இருவகைக்கு கூடிய நெ. பர 10 குளி 8ம் கிழக்கு கந்தையா சோமசுந்தரத்திற்கும் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கும் உரிய ஆதனங்கள், வடக்கு இராசையா கைம்பெண் முத்தாம்மாவினது ஆதனம், மேற்கு அம்பலவாணர் பெண் இராசம்மாவின் ஆதனம், தெற்கு சண்முகம் பெண் பாக்கிய லட்சுமிக்கும் கந்தையா இலகுப்பிள்ளைக்கும் தாமோதரம் பிள்ளை சொர்ணம்மாவுக்கும் உரிய ஆதனங்கள் இதடங்கலும்.

சி. சோ. நரசிங்கம் ஜே. பி.,
நீதிமன்ற விற்பனையாளரும் மதிப்பாளரும்.

தொல்புரம்,
6-6-79.

3302

### வடபிராந்திய போக்குவரத்துச் சபை
### யாழ்ப்பாணம்

## ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

வ. பி. போ. சபையின் கட்டிட, கட்டிட சம்பந்தமான வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்ய விரும்பும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரரால் பின்வரும் விபரங்கள் கொடுக்கப்படல் வேண்டும்.

1. பெயரும் விலாசமும்
2. பொறுப்பேற்கக்கூடிய வேலையின் தன்மையும் பெறுமதியும்
3. மேற்படி வேலை செய்வதற்கான தகைமைச் சான்றிதழ்
4. மேற்படி வேலை செய்வதற்கான இயந்திர உபகரணங்கள், வாகன வசதிகள் இருப்பதற்கான அல்லது ஒழுங்குகள் பற்றிய விபரம்
5. பொருளாதார நிலை பற்றிய சான்றிதழ்
6. வேறு விசேட தகைமைகள்

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தே வழக்கமாகக் கேள்விகள் கோரப்படும். எனினும் அவசியமாகக் காணும் பட்சத்தில் வேறு வழங்குனர்களிடமிருந்து கேள்விகள் கோரி வேலை கொள்ளும் உரிமை சபைக்குண்டு. வேண்டப்படும்போது கேள்விகளைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்படி வேலையைச் செய்து முடிக்கத் தவறும் ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள் அறிவித்தல் இல்லாமலே பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 1979/1980 எனக் குறிப்பிடப்பட்ட தபால் உறையில் இரண்டு பிரதிகளில் 1979-09-15-ந் திகதி அல்லது அதற்கு முன்பு கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்திற்கு கிடைக்கக் கூடியதாக பதிவு அஞ்சலில் அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்,
கேள்விச் சபை,
வடபிராந்திய போக்குவரத்துச் சபை,
165, 4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

3273

### சுன்னாகம்
### பல. நோ. கூ. சங்கம்
### (வரைவுள்ளது)
### சுன்னாகம்

## அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் 5000க்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகளும், 15க்கு மேற்பட்ட வெற்றுப்பரல்களும் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன. வெற்றுச்சாக்குக்கு மீளளிடபு வைப்புப் பணமாக ரூபா 250/-ம், வெற்றுப்பரல்களுக்கு ரூபா 50/-ம் செலுத்தி. கேள்விப்பத்திரங்களை காரியாலய வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் யாவும் 21-8-79 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்,
13-8-79. 3300

## கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்கு ஊர்காவற்றுறை நிறைவேற்றுப் பொறியியலாளரால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள் 20-08-79-ந் திகதி தொடக்கம் 24-08-79-ந் திகதி வரை மேற்படி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 31-08-79-ந் திகதி பிற்பகல் 2-00 மணி வரை பிரதான பொறியியலாளர் (பெருந்தெருக்கள்) யாழ்ப்பாண அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. வேலணை நவக்கை ஆலம்புலம் வீதிக்கு ஊரி நிரப்பல்.
2. மேற்படி வீதியில் குழாய் மதவு, பெட்டி மதவு கட்டுதல்
3. மேற்படி வீதியில் தடுப்புச்சுவர் கட்டுதல்

மேலும் விபரங்கள் தேவைப்படின் ஊர்காவற்றுறை நிறைவேற்றுப்பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்

ஒப்பம்
சி. கணேசரத்தினம்,
பிரதான பொறியியலாளர்
(பெருந்தெருக்கள்),
3299 யாழ்ப்பாணம்.

## கேள்விப்பத்திரம்
### ஊர்காவற்றுறை
### ப. நோ. கூ. சங்கம்
### ஊர்காவற்றுறை

3502 (மூவாயிரத்தி ஐநூற்றி இரண்டு) வெற்றுச் சாக்குகளுக்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. ரூபா 2-50 செலுத்தி சங்கத்திலிருந்து பெறப்பட்ட பத்திரத்தில் "பொதுமுகாமையாளர். ப. நோ. கூ. சங்கம் ஊர்காவற்றுறை" என்னும் விலாசத்திற்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ கேள்விப் பத்திரங்கள் 20-8-79ந் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 18-8-79ந் திகதி பகல் 12-00 மணிவரை சங்கத்தில் விநியோகிக்கப்படும். விண்ணப்பதாரர் ரூபா 750/- வைப்புப் பணம் செலுத்தி இருத்தல் வேண்டும்.

பதில்
பொதுமுகாமையாளர்
ஊர்காவற்றுறை.
10-8-79. 3284

## வியாபாரம பெருக விளம்பரம் செய்க

### ஒருபரிதாப மரணம்:

# மது என்று நினைத்துக் கிருமிநாசினியைக் குடித்தார்

(யாழ்ப்பாணம்)

மதுவெறியில் சாராயமென நினைத்து கிருமிநாசினியை அருந்தியவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

எட்டுப் பிள்ளைகளின் தந்தையான தெல்லிப்பழை இழக்கைச் சேர்ந்த சிவசம்பு சிதம்பரம் பிள்ளை (50 வயது) என்பவரே இவ்விதமாக மரணமானார்.

மரணமாவதற்கு முன்னர் இதழ்பரப்பிள்ளை காங்கேசன் துறைப் பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவிக்கையில் கூறியதாவது!

"சம்பவ தினம் மாலை வியாபாரம் முடித்து நான் வீட்டிற்கு வந்தேன். வீட்டிற்கு வந்ததும் மது அருந்த எண்ணி தோட்டத்திற்குத் தெளிப்பதற்காக வேண்டி வைக்கப்பட்டிருந்த கிருமிநாசினியை மது என்று தவறுதலாக நினைத்து அருந்தி விட்டேன்"

இவர் மின்னர் சிகிச்சைக்காக தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மரணமானார்.

மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். தம்பிராசா மரண விசாரணையை மேற்கொண்டு கிருமிநாசினி அருந்தியதால் மரணம் சம்பவித்ததெனத் தீர்ப்பளித்தார் டாக்டர் ரகுபதி பிரதேபரிசோதனையை மேற்கொண்டார். [கொ]

# கள்ளுத் தவறணையில் கைகலப்பு: மைத்துனர் பலி!

(யாழ்ப்பாணம்)

கள்ளுத்தவறணை ஒன்றிற்குள் கள்ளுக் குடித்துக்கொண்டிருந்த மைத்துனர் இருவர் ஒருவரை ஒருவர் தாக்கியதை அடுத்து ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

சுதந்திரபுரம் உடையார் கட்டைச் சேர்ந்த எஸ். நவரத்தினம் (வயது 28) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். இவரது மரண விசாரணை யாழ் ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

மரண விசாரணையில், கள்ளுத்தவறணையில் இவர்களோடு இருந்த முருகேசு தம்பையா என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"சம்பவதினம் உடையார் கட்டைச் சேர்ந்த நவரத்தினமும் அவரது மைத்துனரான குலதிலக்கர் என்பவரும் ஒன்றாக வந்து கள்ளுக் குடித்தனர். இருவருக்கும் வெறியேறியதும் வாக்குவாதம் நடைபெற்றது பின் இருவரும் கைகளால் அடிபட்டனர் அப்பொழுது குலதிலக்கா அங்கு இருந்த பொல்லு ஒன்றை எடுத்து நவரத்தினத்தைப் பல முறை அடித்தார். அடி தாங்க முடியாது நவரத்தினம் நிலத்தில் விழுந்தார் விழுந்த பின்பும் குலதிலக்கா நவரத்தினத்தைப் பொல்லால் அடித்தார் நவரத்தினம் மயங்கிவிட்டார் குலதிலக்கா ஓடிவிட்டார் நான் நவரத்தினத்தின் வீட்டிற்குச் சென்று நடந்தவற்றைத் தெரிவித்தேன் வீட்டுக்காரரும் நானும் நவரத்தினத்தை முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றோம் அங்கிருந்து யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு வார்ட்டில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்"

மரணவிசாரணை அதிகாரியும் பதில் நீதிபதியுமான திரு எஸ் எஸ் பிரான்சிஸ் பிரேத பரிசோதனையை மேற்கொள்ளும்படி பணித்து தலைமறைவாகியுள்ள சந்தேக நபரைக் கைது செய்யும்படி பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்

முல்லைத்தீவுப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர் [கொ-இ]

# நல்லூரில் பனம் பொருள் பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமிகோவில் மேற்கு வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் பனம்பொருள் அபிவிருத்திச்சபையின் முதலாவது பொருட்காட்சியையும், விற்பனை நிலையத்தையும் மேற்படி சபையின் தலைவர் ஏ. வி நித்தியானந்தா திறந்துவைத்தார்.

இப் பொருட்காட்சியையும் விற்பனை நிலையத்தையும் நாளாந்தம் 5000க்கும் அதிகமான மேற்பட்ட பொதுமக்கள் பார்த்துச் செல்வதுடன் பனைஓலை, பனைஈர்க்கு, பனைமட்டை போன்றவற்றால் உருவாக்கப்பட்ட கைப்பணிப் பொருட்களையும் பாராட்டி வாங்கிச் செல்கின்றனர்.

இந்நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கும் பனம்பொருட்களின் ஆக்கங்கள் மூலம் பனையின் வளமும் பனையின் மூலம் பெறப்படும் பிரயோசனங்களும் உலகெங்கும் பரவுகையில் வெளிநாட்டவர்களை இப் பொருட்கள் பெரிதும் கவர்வதால் அநேக வெளிநாட்டவர்களும் இவற்றை பெருமளவில் பெற்றுச் செல்வதாக இந்நிலையப் பொறுப்பாளர் திரு க மன்மதராஜன் தெரிவித்தார்.

### ஆச்சிரமத்தின் சமய நூல்கள்

ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமத்தினர் சமயசம்பந்தமான நூல்களை நல்லூரில் விற்பனைக்கு வைத்திருக்கிறார்கள். பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம செயலாளர் பிர இரத்தின சபாபதி இவ் விற்பனைநிலையத்தை ஆரம்பித்துவைத்துள்ளார். [கா-இ]

# கிணற்றுக்கு இளைஞர் பலி!

(புலோலி)

கிணற்றில் நீர் அள்ளச் சென்ற இளைஞர் ஒருவர் தவறிக் கிணற்றுள் விழுந்து இறந்த சம்பவமொன்று பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியில் நடைபெற்றுள்ளது.

புலோலி மேற்கு சாளம்பையைச் சேர்ந்த கந்தசாமி தேவானந்தன் (வயது 18) என்ற இளைஞரே இவ்வாறு மரணத்தைத் தழுவியவராவர். வடமராட்சிப்பகுதிக்குரிய மரணவிசாரணை அதிகாரி திரு எம் வி. புவனேந்திரன் விசாரணையை மேற்கொண்டார். பருத்தித்துறைப் பொலிசார் சாட்சியங்களை ஆஜர் செய்தனர்.

இறந்தவரது மாமன் பொன்னையா சாட்சியமளிக்கையில் "இரவு கிணற்றில் நீர் அள்ளச் சென்றபோது வலிப்பு வந்து தவறிக்கிணற்றில் விழுந்தமையால் இறந்திருக்கலாம் என எண்ணுகின்றேன்; எனக்கு வேறு எதுவித சந்தேகமுமில்லை' என்றார்."

இதனையடுத்துவிபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [அ]

# காங்கேசன் சீமெந்து சூளையில் தீ!

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை சூளையொன்றில் எதிர்பாராத விதமாகத் தீப்பிடித்துக்கொண்டதால் தொழிற்சாலையில் சிறிதுநேரம் பெரும் பரபரப்பு ஏற்பட்டு பின்னர் தீயணைப்புப் பிரிவினரால் தீ அணைக்கப்பட்டது.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் சீமெந்துக் கலவையை வறுத்து அனுப்பும் சூளையில் திடீரென தீப்பிடித்துக் கொண்டது. தொழிற்சாலை உத்தியோகத்தர்களும், தொழிலாளர்களும் தீயை அணைக்க முயன்றும் முடியாமையால் பலாலியிலிருந்து தீயணைப்பும் பிரிவினர் வரவழைக்கப்பட்டு தீயணைக்கப்பட்டது, பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்தும் தீயணைப்புப் பிரிவினர் வந்தனர்.

மேற்படி சூளை தொடர்ந்து இயங்கிவந்தமையால் ஏற்பட்ட அதிக வெப்பமே தீவிபத்துக்குக் காரணமெனச் சொல்லப்படுகிறது.

தீவிபத்து பற்றி அறிந்ததும் பொலிசாரும் இராணுவத்தினரும் தொழிற்சாலைக்கு விரைந்து விசாரணைகளை நடத்தினர். இச்சூளை நிறுத்தப்பட்டு சிலதினங்களில் திருத்தப்பட்ட பின் மீண்டும் இயங்கும் எனக் கூறப்படுகிறது. இச்சூளை தீவிபத்துக்குள்ளானபோதும் மற்றைய சூளை தொடர்ந்து வேலைசெய்துவருகிறது.

## டாக்டர்களின் அழைப்புகட்டணம் அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

டாக்டர்களைத் தனிப்பட்ட முறையில் வைத்திய ஆலோசனைக்கு அழைப்பதற்கு இதுவரை வழங்கப்பட்டுவந்த கட்டணம் 25 ரூபாவிலிருந்து 30 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது, இதேவேளை இலங்கையர் அல்லாதவர்களுக்கான வைத்தியக் கட்டணமும் 30 ரூபாவிலிருந்து 60 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது

[இ-இ]

## லஞ்ச ஊழலை விசாரிக்க நிரந்தர ஜனாதிபதிகமிஷன்

(கொழும்பு)

லஞ்சம், ஊழல் போன்ற சமூகவிரோதச் செயல்களை விசாரிக்க நிரந்தரமான ஜனாதிபதிக் கமிஷன் ஒன்று விரைவில் நிறுவப்படவுள்ளது

இக்கமிஷன் குறிப்பாக அரசியல் வாதிகள், உயர் அதிகாரிகள் மற்றும் அரசாங்க, தனியார் ஊழியர்கள் போன்றோரின் நடவடிக்கைகளை விசாரணை செய்யும்.

கமிஷன் விசாரணைகள் சாதாரண நீதிமன்ற விசாரணைகள் போலல்லாது விசேட நீதிபதிகளைக்கொண்ட தனியான அறைகளிலேயே நடைபெறும்.

[இ]

## முருகனே, காத்தெமை அருள்வாய்

கற்பனைக் கெட்டாத கருணைப் பிரவாகமே
கருது மடியார்கள் மனதில்
களி நடம் புரிகின்ற கலியுக வரதனே
காரானை முகன் தம்பியே
ஒப்பரிய வனசரர் குலமாது வள்ளியொடு
உயர் தேவகுஞ்சரி மணாளா
செப்பரிய முகமாறும் கரங்கள் ஈராறும் ஒளி
சிறந்த பேரருள் வடிவமே
செங்கையில் வேல்தாங்கு செந்தமிழ்த் தெய்வமே
செங்கதிர் ஞான ஒளியே
பொற்புமிகு வேதாந்த சித்தாந்தப் பொருளாகி
புகலு மோங்கார முதல்வா
அற்புதம் பலபுரி நல்லை நகர் முருகனே
அடியர் துயர் தீர்த்தருவாய்
ஆடுமயில் மீதிவரும் ஆறுபடை வீடமரும்
ஆனந்தமான பொருளே.

தேனமிர்தச் சுவையூறும் தேவாரப் பாடல்பெறு
திருத்தல மிரண்டு முளதாய்
திருப்புகழ்ப் பாடல்புனை கதிரமலையமைவுற்ற
திருவார் இலங்கைதனில்
மாகமுயர் கோபுரம் மணிமண்டபங்கள் நிறை
மாண்பு மிகு நல்லைநகர் வாழ்
மரகத மயூரனே மருவுமடியார் மனதில்
மகிழ்ந்து நடம் புரியும் குமரா
கந்தா சுகந்தா வெனவடியர் பெருக்கிடும்
கண்ணீர்ப் பெருங் கடலிலே
கருணை அலைவீசியே கண்ணருள் புரிந்திடும்
கண்கண்ட தெய்வம் நீயே
காலங்கடந்த பெரு மூலமாய் யோகியர்
கருதிடும் ஞான ஒளியே
கார் மேகவண்ணனின் மருகனே முருகனே
காத்தெமை யருள்வாயே

— புலவர் ச. சச்சிதானந்தசிவம்,
ஏழாலை.

# மக்கள் கருத்து

## யாழ். பல்கலைக்கழகத்தின் நுண்கலை நிலையத்தின் குறைகள்

''கல்வியில் சிறந்தது எதுவும் இல்லை என்பதால்தான் உலகநாடுகளில் கல்விக்கு முதன்மை கொடுத்து கல்விக்கூடங்களையும் உயர்கல்வி நிலையங்களையும் நிறுவி மக்களுக்குக் கல்வி புகட்ட வழிவகைகளைச் செய்துவருகிறார்கள், நாட்டுக்கு நாடு மொழி, கலை, கலாச்சாரங்கள் மாறுபட்டிருந்தாலும் உலக மக்களின் கொள்கை கல்வி கற்பதன் நோக்கம் ஒரே மாதிரியானதாகவே உள்ளது. இலங்கை அரசாங்கமும் பல இடங்களில் கல்விக்கூடங்களையும், உயர்கல்வி நிலையங்களையும் நிறுவியுள்ளது

இராமநாதன் நுண்கலைநிலையமாக இயங்கிவந்த கல்விநிலையத்தை பல்கலைக்கழக யாழ் வளாகம் பொறுப்பேற்று நடாத்திவந்தது பின் வளாகம் பல்கலைக்கழகத்துக்கு மாற்றப்பட்ட பின்னர் சீரான நிர்வாகம் இல்லாமையால் நுண்கலைப்பீடம் சீர்குலைந்துபோய் முன்னேற்றமற்ற நிலையில் இருந்துவருகிறது. குறிப்பாக இதுவரை இதற்குப் பொறுப்பாக எவரும் நியமிக்கப்படவில்லை. கட்டிடவசதியின்மையால் முறையான அலுவலகம், தொலைபேசி வசதி, இளைப்பாறும் அறை, உதவியாவர், தட்டச்சு, நேர்த்தியான அறிவித்தல் பலகை, மாணவர் படிப்பதற்கான வகுப்பறை மலசலகூடம், வாத்தியங்கள் [பலதரப்பட்டவையும்] விடுதிவசதி, விளையாட்டுத்திடல்போன்ற பலதரப்பட்ட குறைகளிருந்தும் அதை கவனித்து சீரான நிலையை ஏற்படுத்தமுடியாமல் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் இருப்பது கவலைக்குரியதாகும். கலையார்வமுள்ள இவர் இப்பீடத்தின் தேவைகளை நிறைவேற்ற உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் பல்கலைக்கழக கவுன்சிலும் இதை கருத்தில்கொண்டு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துமுடிக்க வேண்டும்.

தற்போது இங்கு சுமார் 225 மாணவர்களிவரை பலதரப்பட்ட கலைகளையும் கற்றுவருகின்றனர்; ஆனால் இவர்கள் படிப்பதற்கு போதுமான கட்டிடவசதி இங்கு இல்லை, கடந்த வருடம் ஏப்பிரல் மாதமளவில் ஒரு சிறிய கட்டிடத்திற்கு அத்திபாரம் போடப்பட்டு இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் தான் வேலைகள் முடிந்துள்ளன கிட்டத்தட்ட ஒன்றரை வருடகாலமாக இந்தக் கட்டிடம் கட்டப்பட்டது.

1978ம் ஆண்டுமுதல் இப்பீட மாணவர்களுக்கு வங்கிக் கடன் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டபோதும் 1979ம் ஆண்டு பெப்ரவரி மாதம்தான் கடன் பெறத் தகுதியான மாணவர்களுக்கு ஒருமாதப்பணம் முற்பணமாகக்கொடுக்கப்பட்டது அதன்பின் இன்றுவரை அவர்களுக்கான வங்கிக்கடன் கொடுக்கப்படவில்லை மாணவர்கள் பலர் முயன்றும் எதுவும் அறியமுடியாதுள்ளது. காரணம்கூறமுடியாதநிலை. வசதியற்ற பல மாணவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் படிப்பைத் தொடரமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வருடம்முதல் பல்கலைக்கழக நூல் நிலையத்தைப் பாவிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் நுண்கலையைப் பொறுத்தவரை யாழ் பல்கலைக்கழக நூல் நிலையம் இப்போதுதான கர்ப்பவதியாக உள்ளது போலுள்ளது. காரணம் அங்கு நுண்கலையைப் படிக்க விரும்பிச் செல்லும் மாணவர்களுக்கு இந்தியாவிற்கு எழுதியுள்ளோம். புத்தகங்கள் வந்ததும் நீங்கள் படிக்கலாமென்றுதான் கூறுகின்றனர்.

அடுத்து இப்பீடத்திலிருந்து வெளியேறும் மாணவர்களுக்கு வேலைகிடைக்கும் பட்சத்தில் அவர்கள் தாம் கற்றதை மற்றைய மாணவர்களுக்கு பயிற்றமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது, காரணம் இவர்களுக்கு இங்கு ஆசிரியர் பயிற்சி நடத்தப்படுவதில்லை.

இக்குறைகளைப்போக்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரும் பல்கலைக்கழக கவுன்சிலும் உரிய நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்வார்களா?

கே. பி. அன்ரனி
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

## சேவை நலம் பாராட்டு

[யாழ்ப்பாணம்]

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் பல வருடங்கள் சங்கீத ஆசிரியராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற திரு க. பாக்கியராசாவுக்கு [சித்திவிநாயகம்] சேவை நலம் பாராட்டுவிழா கல்லூரி ஆசிரியர் சங்கத்தின் தலைவர் திரு சு சண்முகரத்தின சர்மா தலைமையில் நடைபெற்றது

இவ்விழாவில் மேற்படி கல்லூரி அதிபர் திரு எஸ் கனகராசா, திருவாளர்கள் கே சட்டநாதன், எஸ் பஞ்சாட்சரநாதன், எம் செல்லத்துரை, எஸ் சாம்பமூர்த்தி, திருமதி அ தியாகராசா உட்படப் பலர் பாராட்டி உரை நிகழ்த்தினார்கள்

பண்டிதர் எஸ் சுப்பிரமணியம் பாராட்டுப் பத்திரத்தைப் பாடி வழங்கினார். செயலாளர் த சாமிவேல் நன்றி கூறினார்

[கா-கு]

## மயானத்தை புனரமைக்க நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறையிலுள்ள சைவமக்களது மயானத்தைப் புனரமைப்புச் செய்ய காங்கேசன்துறைப் பட்டினசபை நிதி ஒதுக்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி மயானம் பற்றைகளும், செடிகளும் நிறைந்து பொதுமக்களுக்கு பெரும் அசௌகரியமாக இருந்து வந்தமையால் இதனைத் திருத்த நடவடிக்கை எடுக்குமாறு காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி திரு ஆர். தெய்வேந்திரனை பொதுமக்கள் கோரியதையடுத்து அவர் இது பற்றி காங்கேசன்துறைப் பட்டினசபைக்கு அறிவித்திருந்தார்.

இதையடுத்து பட்டினசபை விசேட ஆணையாளர் திரு. க. சண்முகநாதன் மேற்படி மயானத்தைத் திருத்தி சுற்றிவர மதில் அமைக்கவும், மயான கிணற்றை புனரமைப்புச் செய்யவும், மற்றும் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளவும் நிதி ஒதுக்கி இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

[இ]

## ''பிள்ளைகளின் ஆசைகளுக்கு குறுக்கே நிற்கக்கூடாது''

[தெல்லிப்பழை]

''இளைஞர்கள் வாழ்க்கையில் முன்னேறவேண்டும் என்று ஆசைப்படுகின்றார்கள், இவர்களின் ஆசையை நிறைவேற்றுவதில் பெற்றோரும் ஒத்துழைக்கவேண்டும். பிள்ளைகளின் ஆசைகளுக்கு குறுக்கே அவர்களை ஏமாற்றுவது பெற்றோர் செய்யும் மாபெரும் தவறாகும்''

வடமராட்சி கத்தோலிக்க ஆசிரிய சங்கத்தால் நடாத்தப்பட்ட சர்வதேச சிறுவர் தினவிழாவில் பேரருட்திரு. பிரான்சிஸ் அடிகளார் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

பருத்தித்துறை பங்குத் தந்தை திரு எஸ். இராஜேஸ்வரன் தலைமையில் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய முன்றலில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இன்றைய இளைஞர் சமுதாயமே நாளைய இளம் சந்ததிகளுக்கு முன்மாதிரியாகத் திகழவுள்ளது. ஆதலால் இன்றைய இளம் சமுதாயம் - முன்மாதிரியாக வாழப் பழகிக்கொள்ளவேண்டும் கடமைகளைக் கண்ணியமாகச் செய்யவேண்டும் பெற்றோர்கள் தமது கஷ்டத்தின் மத்தியிலும் உங்கள் நல்வாழ்விற்காக எவ்வளவோ பணத்தை செலவிடுகின்றார்கள். உங்களை நம்பியுள்ள அவர்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கி வேதனைப்படுத்தக்கூடாது''

பேரருட்திரு யேக்கப் அடிகளார் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தினைச் சேர்ந்த திரு. வின்சன்ற், டொமினிக் அடிகளார் ஆகியோரும் உரையாற்றினர்.

வடமராட்சிப் பகுதி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

[இ]

## இன்றைய பலன்

ஆடிமாதம் 30-ம் திகதி
[புதன்கிழமை]
(15 8-1979)

**மேடம்:** செலவினங்களைச் சமாளிக்க முடியாமல் திண்டாடுவீர்கள், எதிலும், அதிக சோர்வு தென்படும், தொழில் துறையில் அதிருப்தி நிலவும், இனபந்துக்கள் மத்தியில் அபிப்பிராய பேதங்கள் தோன்றி மறையும்

**இடபம்:** கருடப் பார்வை உங்களை வட்டமிடும், வேண்டாதவர்களின் குறுக்கு வழித் தலையீடு உங்களை வேதனையில் ஆழ்த்தும், சிலருக்கு உடல் நலமும் சிறிது பாதிக்கப்படலாம், சுகாதாரம் வேண்டும்.

**மிதுனம்:** நலன்தரும் சம்பவங்கள் நடக்கும். நலிவு சொல்லாமல் பறக்கும். இல்லத்தில் இனிமை பிறக்கும். சுபமான தினம்.

**கடகம்:** அதிக ஆசை ஆபத்தைத் தேடித்தரலாம். அன்னியர்களுடன் பழகுவதில் அதிக அவதானம் செலுத்த வேண்டும். எதிலும் மனதை அலட்டிக் கொள்ளாது இருப்பது விரும்பத்தக்கது. தெய்வநம்பிக்கை வேண்டும்.

**சிங்கம்:** வாகனச் சுகத்துடன் வாழ்க்கை நலன்வந்து சேரும். தாய்வழித் தனத்துடன் தன்மானம் தலைதூக்கும்.

**கன்னி:** பூமிப்பிணக்கில் ஒரு சமரச முடிவு ஏற்படலாம். வழக்கு விவகாரங்கள் தவிர்க்கப்படும் பிள்ளைகளின் செல்வாக்குப் பெருகும்.

(7-ம் பக்கம் பார்க்க)

# இந்திய சுதந்திரதின சிறப்பு

## சுதந்திரத்தின் பின்னர்

# பல்துறைகளிலும் பாரதம் கண்டுள்ள முன்னேற்ற

சுதந்திரத்திற்குப் பின்னர் இந்தியா வளர்ச்சிப் பாதையில் பெரும் முன்னேற்றங்களை கண்டிருக்கிறது. உலகின் பெரும் தொழில் வளர்ச்சி நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகத் திகழ்கிறது. உலகில் தொழிற்துறையில் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளின் வரிசையில் பத்தாவது இடத்தை இந்தியா வகிக்கின்றது. அமெரிக்கா சோவியத் யூனியன் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக பயிற்சிபெற்ற அதிக தொழில் நுட்ப வல்லுனர்களைக் கொண்ட நாடு இந்தியாவாகும்.

### விவசாயம்

விவசாயத்துறையில் உற்பத்தித்திறன் 5 கோடி தொன் என்ற அடிப்படையிலிருந்து நடப்பு ஆண்டில் 13 கோடியே 50 லட்சத்து 60 ஆயிரம் தொன் என்ற அளவுக்கு உற்பத்தித்திறன் அதிகரித்துள்ளது. காலமாற்றங்கள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியபோதிலும் விவசாயத்துறையில் நாடு கணிசமான தன்னிறைவைக் கண்டுள்ளது. உலகின் நான்காவது பெரிய உணவுதானிய உற்பத்தி நாடாகத் திகழ்கின்றது. அரிசி உற்பத்தியில் இரண்டாவது நாடாக விளங்குகின்றது. கோதுமை ஆராய்ச்சியிலும் முன்னோடியாக திகழ்வதுடன், பண்ணை அமைப்பு, விவசாய விஸ்தரிப்பு, வீரிய இனப்பயிர் ஆராய்ச்சி போன்ற வற்றில் ஏனைய ஆசிய நாடுகளுக்கெல்லாம் வழிகாட்டியாக முன்னணி நிலையில் இருந்து வருகிறது.

பண்ணை உற்பத்தித்திறன் 2 கோடியே 20 லட்சத்து 20 ஆயிரம் ஹெக்டயர் என்ற நிலையிலிருந்து ஐந்து கோடி 60 லட்சம் ஹெக்டயர் என்ற அளவுக்கு அதிகரித்துள்ளது.

### நீர்ப்பாசனம்

நீர்ப்பாசனத்துறை அபிவிருத்தியில் பெரும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. மேலும் ஒரு கோடி 70 லட்சம் ஹெக்டர் நிலப்பரப்புக்கு பாசனம் கிடைக்கக்கூடியதாக நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன.

மிருகவளர்ப்பு, மிருகப் பண்ணை அமைப்பு மீன்பிடி, காடு வளர்ப்பு போன்ற துறைகளிலும் அதிக அக்கறை எடுக்கப்படுகின்றது.

சுதந்திரத்தின் ஆரம்ப காலத்தில் இந்தியாவின் தொழில் தளம் மிகக் குறுகியதாகவே இருந்தது. ரயில்வே உள்ளூர்சேவைக்கான சிறு பொருள் உற்பத்தி போன்றவற்றிலேயே தொழில்திறன் அதிகமாகப் பிரயோகிக்கப் பட்டது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு வரை தொழில்முலப் பொருட்கள், கனம், தேயிலை, வாசனைப் பொருள் இரும்புக் கனரகம், சீனி, பருத்திப் புடவைகள் போன்றவற்றையே இந்தியா ஏற்றுமதி செய்துவந்தது. நுகர்வுப் பொருட்களைப் பொறுத்த வரை இறக்குமதியிலேயே நாடு தங்கியிருந்தது. எதிர்ப்புகளின் மத்தியில், இந்தியாத் தொழில்துறையில் மாற்றங்களும் விஸ்தரிப்புகளும் ஏற்படலாயின. பாரம்பரியப்பொருள் உற்பத்தி சிறப்பாக வளர்ச்சியடைந்து விட்டன. அதேசமயம் தனியார்துறையின் வளர்ச்சிக்கு இருந்துவரும் தடங்கல்களை நீக்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. நாட்டின் சமூக பொருளாதார நோக்கங்களை கருத்திற்கொண்டு பெரிய நிறுவனங்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் அரசு ஆலோசிக்கின்றது.

### உருக்கு உற்பத்தி

சுதந்திரத்திற்குப் பின்னர் உருக்கு உற்பத்தி முக்கியத்தவம் ... பட்டது. மூன்று ... திலே உருக்கு ... திறன் விஸ்தரி... இப்பொழுது உரு... திட்டங்கள் ... பற்றி ஆராயப்... றது.

புதிய முத... களில் உர உற்ப... கவனத்தைப் ... கச்சா உற்ப... ஆண்டு ஒரு கோ... ரம் தொன்னாக இ...

## நவ... பிரதம...

கடந்த மாத... பாராளுமன்றத்தி... தக்க பல மாற்ற... படுத்தி, ஜனத... னும், ஏனைய சி... கட்சிகளுடனு... ஜனதா அரசா... கவிழ்த்து இந்தி... வானிலேயே ... நட்சத்திரமாக ... புதிய பாரதப்... ஸ்ரீ சரண்சிங் சிற... தரிமட்டுமல்ல, சமூக சேவகனும், ... யிலே அளவற்ற ... யும், உறுதியும்... செயல் வீரருமாவ...



""சௌத்ரி சாஹு... பிரபல்யமாக அ... ஸ்ரீ சரண்சிங் ... பிரதமராக க... மாதம் 28ந் திகதி... நீலம் சஞ்சீவரெட்... லையில் சத்தியப்... செய்துகொண்டா...

1902ம் ஆண்டு... பிரதேசத்திலுள்ள... மாவட்டத்திலே ... னும் சிற்றூரில் ... குடும்பமொன்றில் ... சரண்சிங் 1925 ல் ... பட்டதாரியானார்... டக் கல்வியில் ஆர்... டவராய் ... ஈடுபட்டு. காசிப... சிலகாலம் சட்ட... யாகக் கடமை...

1929-ம் ஆண்... வில் புகுந்த ஸ்ரீ... காங்கிரஸ் கட்சி... இந்திய சுதந்திர... வுக்காக அயரா... தார் இதனால் பல... சிறைவாசத்தையு... தார் 1967ல் உ... த்தின் முதலமைச்... சரண்சிங் 1968ல் ...

சுதந்திர இந்தியாவின் சுபீட்சத்திற்கு
நாமும வாழ்த்துகிறோம்

நறுமணங்கமழும் தூய சைவ உணவிற்கு
கிறீன்லன்ட்ஸ் ஹோட்டல்

நவீன வசதிகள் கொண்டு
தங்கும் அறைகளும் உண்டு

தலைநகரின் தலைசிறந்த ஹோட்டல்

கிறீன்லன்ட்ஸ் ஹோட்டல் லிமிட்டெட்.

3-ஏ, சிறபறி காடின்ஸ், பம்பலப்பிட்டி.

தொலைபேசி: 85592 – 81986 தந்தி: கிறீன்லன்ட்ஸ்

சுதந்திர இந்தியாவின் சுபீட்சத்துக்கு
எமது
நல் வாழ்த்துக்கள்

ஸ்டபோட் மோட்டார் கம்பனி லிமிட்.
"ஹொண்டா ஹவுஸ்"

718/7, மருதானை றோட், கொழும்பு-10.

HONDA



ஹொண்டா
மோட்டார் சைக்கிள்களுக்கு

ஏக விநியோகஸ்தர்கள்.

## ...பு மலர்

## ...ற்றம்

...திப்பத்திக்கு உயர்
...வம் கொடுக்கப்
...மூன்றுவது திட்டத்
...க்கு உற்பத்தித்
...ன்தரிக்கப்பட்டது
...து உருக்கு கூட்டுத்
... ஆரம்பிப்பது
...ராயப்பட்டுவருகின்

...முதலீட்டுத்துறை
... உற்பத்தி அதிக
...ப் பெறுகின்றது.
... உற்பத்தி 1977ல்
...கோடி 20 ஆயி
...ஆக இருந்தது.

எண்ணெய் சுத்திகரிப்பில் இந்தியா இப்பொழுது தன்னிறைவு கண்டுள்ளது. நாட்டின் பலபாகங்களிலும் 9 சுத்திகரிப்பு நிலையங்கள் அமைந்துள்ளன

ரயில்வே துறைக்கான உற்பத்தியில் நாடு தன்னிறைவு கண்டுள்ளது. நீராவி, டீசல், மின்சார ரயில்வாகனங்கள், பெட்டிகள், சக்கரங்கள் போன்ற உற்பத்தி அதிகரித்துள்ளன.

நிலக்கரி சுரங்கத்தொழிலுக்கான கருவிகள் யாவும் இப்பொழுது உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன. புல்டோசர்கள், மற்றும் மண் அகற்றிகள் போன்ற கனரகக் கருவிகள் உள் நாட்டுத் தேவைக்கும் ஏற்றுமதிக்குமேனத்தயாரிக்கப்படுகின்றன.

### தொழில் நுட்ப ஆதரவு

தொழில் நுட்ப அறிவினை வெளிநாடுகளுக்குக் கொடுத்துதவுதல் இன்னொரு முக்கிய அபிவிருத்தியாகும் முகாமைத்துவத்துறையிலும் இந்தியா அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. வளர்ச்சியுற்ற நாடுகளுங்கூட ! இப்பொழுது இந்தியாவின் ஆலோசனைகளை நாடி வருகின்றன.

பொருளாதாரத் துறையில் இந்தியா அடைந்துள்ள வளர்ச்சியைப்பின்வரும் வகைகளில் கடைக்கலாம்;

உண்மையான தேசிய வருமானம் 7 4 வீதம் அதிகரித்துள்ளது ஏனைய ஆண்டுகளை விட இது வளர்ச்சி விகிதம் அதிகமாகும்.

° நடப்பு ஆண்டு உணவு உற்பத்தியில் சிறப்பாக இருந்துள்ளது.

° கோதுமை உற்பத்தி 9 வீதம் அதிகரித்துள்ளது. அரிசி உற்பத்தி 25.7 வீதம் அதிகரித்துள்ளது.

° உணவுதானிய உற்பத்தியில் புதிய சாதனை நிலைநாட்டப்பட்டது. நடப்பு ஆண்டின் உற்பத்தி 12 கோடியே 50

[8-ம் பக்கம் பார்க்க]

## ...வ இந்தியாவின் புதிய ...தமர் சரண்சிங்

... மாதம் இந்தியப்
...றத்திலே வியக்கத்
...மாற்றங்களை ஏற்
...னறு சகாக்களுட
...ய சில அரசியல்
...டனும் சேர்ந்து
...ரசாங்கத்தைக்
... இந்திய அரசியல்
... தனிப்பெரும்
...ாக விளங்கும்
...ரதப் பிரதமர்
...ங் சிறந்த ராஜதந்
...ல, இறந்த ஒரு
...னும், சமூக நீதி
...வற்ற நம்பிக்கை
...யும்கொண்ட ஒரு
...ருமாவார்.



...ரி சாஹிப்'' என
... அழைக்கப்படு
... இந்தியாவின்
... கடந்த ஜூலை
... திகதி ஜனாதிபதி
...வரெட்டி முன்னி
...த்தியப்பிரமாணம்
...ண்டார்.

... ஆண்டு உத்தரப்
...ஹுள்ள மீரூட்
...திலே நூர்பூர் என்
...றாரில் சாதாரண
...ன்றில் பிறந்த திரு.
...925 ல் விஞ்ஞானப்
...பராஜுர். பின் சட்
...ில் ஆர்வம் கொண்
... சட்டத்துறையிலும்
... காசியாபாத் நகரிலே
... சட்டத்தரணி
...டமையாற்றினார்
... ஆண்டில் அரசிய
...ந்த ஸ்ரீ சரண்சிங்
... கட்சியில் சேர்ந்து
...சுதந்திரத்தின் விடி
...ஓயராத உழைத்
... பல தடவைகள்
...களையும் அனுபவித்
...7ல் உத்தரப்பிரதே
...லமைச்சரான திரு
...068ல் ராஜினாமாச்
...ர தீப ... த

தாக்'' எனும் கட்சியை நிறுவி 1969ல் இடம்பெற்ற மாநில இடைத்தேர்தலில் அப்புதிய கட்சி சார்பில் 98 ஆசனங்களைக் கைப்பற்றி இரண்டாவது தடவையாக முதலமைச்சரானார் 1977-ம் ஆண்டு நடைபெற்ற இந்தியப் பொதுத்தேர்தல் ஜனதாக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற திரு. சரண் சிங், மொரார்ஜி தேசாய்

[8-ம் பக்கம் பார்க்க]


32-வது இந்திய குடியரசுதின விழா சிறப்புற
எமது நல்வாழ்த்துக்கள் !

**ஐ. ஓ. பி.-உண்மையாக சர்வதேசரீதியில் இயங்கும் இந்திய வங்கி**

இந்தியா, ஹொங்கொங், கொரியா, சிங்கப்பூர் எங்கும் 700 கிளைகளுக்குமேல் உண்டு. உலகமெங்கும் முகவர் ஏற்பாட்டு வசதிகளுமுண்டு.

பின்வரும் முகவரியில் கரைக்கு அப்பால் வங்கிப் பிரிவு உண்டு :-

13,--3/3 லொயிட்ஸ் கட்டடம்
சேர் பெரன் ஜயத்திலக்க மாவத்தை
கொழும்பு - 1

- பூரணத்துவமான சர்வதேச வங்கி சேவை வசதிகளை அளிக்கிறது
- பாரிஸ் கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு ஐ. ஓ. பி. நிதி உதவியளிக்கின்றது
- உலகின் எப்பாகத்திலும் உங்களுக்குப் பணிபுரிவதற்கான நிபுணத்துவமும், அனுபவமும் எமக்குண்டு முக்கியமாக உங்களது குறித்த தேவைகளுக்கு தனித்துக் கவனம் செலுத்துவதற்கான நேரமும் ஆட்களும் எங்களிடம் உண்டு.

**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி**

139, பிரதான வீதி, கொழும்பு - 11.

சேர்ந்து வளர்வதற்கு நல்ல மனிதர்கள்



வீடு கட்டுதல், சுவர் எழுப்புதல்,
தரை அமைத்தல்...

எதுவாயினும்
பாவியுங்கள்



மேசன் வேலைக்கான சீமெந்து

மேசன் வேலைக்கான சீமெந்து. வீட்டு நிர்மாணத்தில் ஒரு புதுமையாகும், இது சிக்கனமானது; மலிவானது. சீமெந்துக்கான அமெரிக்க தர நிர்ணயத்துக்கு இணங்கியது. போர்ட்லண்ட் சீமெந்தைப் போலவே இதனையும் பாவிக்கலாம். சீமெந்து / மணல் விகிதாசாரம் போர்ட்லண்ட் சீமெந்துக்குப் போலவேயாகும். மேசன் வேலைக்கான சீமெந்துக்கு சுண்ணாம்பு தேவையில்லை. மணல், சீமெந்து. தண்ணீர் இவை மூன்றுமே போதும். கலவை பூரணமாகிவிடும்.

மேசன் வேலைக்கான சீமெந்து கொண்டு கட்டடச் செலவைக் குறையுங்கள்:

- கொங்கிறீட் வேலைக்குப் பயன் படுத்தக்கூடாது: 50 கி. கிறாம் கொண்ட ஒரு பை மேசன் வேலைக்கான சீமெந்தின் விலை:
- புத்தளம் அல்லது காங்கேசன்துறைத் தொழிற்சாலையிலிருந்து ரூபா 17/90
- காலி தொழிற்சாலையிலிருந்து ரூபா 20/80.

**இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்**

தபால் பெட்டி 1382, சுதந்திர சதுக்கம், கொழும்பு- 7. தொலைபேசி: 95628. 95801-4.

**நல்லைஞானசம்பந்தர் ஆதீன குரு மகாசந்நிதானம் ஞானபீடமேற்ற 13-வது ஆண்டுவிழா சிறப்பு மலர்**

# இந்தத்தலைமுறையில் ஈழம்கண்ட சான்றோன்

## தவத்திரு குன்றக்குடி அடிகள்

நாடு பலரைக்காண்கின்றது. ஆனால் மிகச்சிலரே நாட்டைக் காண்கின்றனர். மனித குலத்தின் வரலாறு இடையீடின்றி தொடர்ந்து எழுதப்பெற்று வருவது முன்னர் கூறிய பலரால் அல்ல. பின்னர் எடுத்துக்கூறிய சிலராலேயாம். பலர் ஆர்ப்பரிப்பர். மனத்தது மாசாகமாண்டார் நீரசடி மறைந்தொழுகுவர். அவர்களுடன் தவத்தின் கோலம் கொண்டிருந்தாலும் அவர்கள் வெளிப்படுத்தும் ஒலி, தவத்தினைச் சார்ந்ததாக இருந்தாலும் அத்தனையும் சாகிதம் பயனற்றவை. அவர்களின் நெஞ்சங்கள் அன்புத்தவத்தில் ஈடுபடுவதில்லை. தவநெறியில் நிற்பதில்லை. ஆன்மநேய ஒருமைப்பாட்டுக்கும் அவர்களுக்கும் நெடுந்தொலைவு. ஆயினும் "இம்" என்றால் வாறு கண்டு உணர்ந்து நன்னெறிகளை உய்த்து செலுத்துவோரே உயர்ந்தோர்.

இத்தகு சான்றோர் வரிசையில் இந்தத் தலைமுறையில் ஈழத்தில் ஒருவரை நாடு கண் டது. இல்லை, நாடு தந்தது. அவர்கள்கண்டனர் நாட்டை. ஏழாம் நூற்றாண்டில் வேத நெறிதழைத்தோங்க திருஞானசம்பந்தர் தோன்றினர். ஆனாலும் திருஞானசம்பந்தரின் தோற்றத்தால் வேதநெறியிலும் விழுமிய பயன்பெற்றது மிகு சைவத்துறையே. திருஞான சம்பந்தர் தன்னைத் தமிழ் ஞானசம்பந்தன் என்று சொல்லிச் சொல்லிப் பெருமைப்படுகின்றார். நற்றமிழ் ஆரூரர் திருஞானசம்பந்தர் செய்த தொண்டினைப் பாராட்டி அவரைத் தமிழ்த் தொண்டர் என்று கூறுகின்றார். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் என்பது சுந்தரர் திருவாக்கு பழங்காலத்தில் தமிழ், மொழியின் அளவாகமட்டுமல்லாமல் அதுவே நெறியாகவும் முறையாகவும் விளங்கியது. அதனாலன்றோ "செழுந்தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல" என்று சேக்கிழார் அருளிச் செய்தார். இன்று திருஞானசம்பந்தர் திருப்பெயரில் திருஞானசம்பந்தரின் திருவருள் நோக்குப் பதிந்த ஈழத்தில், நல்லூரில் நன்றுடையான் புகழ்பாடும் நல்லைஞானசம்பந்தர் ஆதீ

நூறுதடவை உலகம் பற்றிப் பேசுவர். எல்லாம் சிறுபிள்ளை விளையாட்டு. விளையாட்டு ஆதலால் ரசிப்பவர்கள் பலர் கூடுகின்றனர். இந்தத்திசையிலிருந்து நாட்டை உள்ள

(7-ம் பக்கம் பார்க்க)

## மேன்மேலும் விளங்கி வாழி

(இ. வா. ஜெகநாதன்)

"அருள் நிதியாய்ப் பரமனுமாய்ச் சிவஞானம்
பெருங்களிறாய் அணைந்த செம்மல்
திருஞானசம்பந்தர் பெயருடைய மடாலயந்தான்
திகழ் யாழ்ப்பாணத்
திருவுடைய நல்லூரில் பதின்மூவாண்டாய்
நிலவி அருள் ஓங்கச் சைவத்
தெருள்பரவத் தொண்டு புரிகின்றதனைச்
சான்றோர்கள் தெரிந்தின் பார்த்தார்"
[illegible]
இசையினிலே திறமை பெற்றான் விரிவுரைகள்
இனிதாற்றும் ஏற்றம்கொண்டான்
நசையுடனே நான் நாளும் பூஜை
நவியாற்றி அன்பு நலத்தில் வீறித்
திசை புகழப் பலர் போற்றச் சைவத்தின்
பெருமையினைத் திகழச் செய்வோன்
விசை மயில் ஊர் முருகன் திருவருளால்
மேன்மேலும் விளங்கி வாழி.

# இலங்கையில் முதன்முதல் ஆதீனம் அமைத்தவர்

பூர்வாசிரமத்தில் நல்லோர் பரம்பரையைச் சேர்ந்தவர் சுவாமிகள். ஈழத்தில் சகலாகம பண்டிதராய் விளங்கியவர், வித்வான் கணேசையர் என்பவர். அவரது பேரன் முறையானவர், நமது சுவாமிகள்.

இன்னிசை விரிவுரையாற்றுவதில் துறைபோனவரும் தமிழ் நாட்டிலும், ஈழத்திலும், பிரசித்தமானவரும், மலேயாவுக்குப் பல வருடங்களுக்குமுன் அறிமுகமானவருமான பிரம்மஸ்ரீ சங்கரசுப்பையர் அவர்களுக்குப்பின் இன்னிசை விரிவுரையாற்றுவதில் அவர்களுக்கு வாரிசாக சமமாகத் திகழ்பவர் நமது ஸ்வாமிகள்.

ஸ்ரீலங்காவில் சமயக் கல்வி பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம்வரை கட்டாய பாடமாக உள்ளது என்பது தனிச் சிறப்பாகும். தமிழ் நாட்டில் இருந்ததுபோல ஆதீனங்கள் எதுவும் ஸ்ரீலங்காவில் இருந்ததில்லை. அங்கு முதன் முதலாக ஞானசம்பந்தர் ஆதீனத்தை நிறுவிய பெருமை சுவாமிகள் அவர்களையே சாரும்.

ணம், மகாபாரதம், பெரிய புராணம், திருமுறைகள், திவ்யப்பிரபந்தங்கள், திருப்புகழ் முதலியன அவர்களது பேச்சுக்களில் களி நடம்புரிவதைக் காணலாம். பேச்சில் இனப்பகையோ, சாதித்துவேஷமோ, மொழிப் பூசலோ இருக்காது. சமயதத்துவங்கள், புராண இதிகாசங்களின் கருவூலம், இசைஞானம், சொல்லாற்றல் இவை ஒருங்கே உறவாடுவதைக் காணலாம். கம்பராமாயணத்தை ஐம்பது தடவைகள் சொல்லி முடித்து பெரும் பாராட்டைப் பெற்றவர் நமது சுவாமிகள்.

நாவலரைக் காணாதவர்கள் சுவாமிகளின் திரு உருவில் கண்டு மகிழ்கிறார்கள். சுவாமிகள் சிவபூஜா துரந்தரர் அவர்கள் நிறுவியுள்ள ஆதீனத்தில் மூன்று காலப்பூஜை உண்டு, சமயபாட வகுப்புகள், புராண வகுப்புகள், வேதபாராயண வகுப்புகள் முறையாக நடைபெறுகின்றன. உடல் வளத்துக்காக யோகாசன வகுப்புகளும் உண்டு. சமயப் பெரியார்கள் குருபூஜைகள், சமய

**- சுவாமி பிரணவானந்த சரஸ்வதி -**
(தலைவர், தெய்வீகவாழ்க்கைச்சங்கம்-கோலாலம்பூர்)

மதுரை ஞானசம்பந்த ஆதீன குருமகாசந்நிதானத்திடம் சந்நியாசம் பெற்ற சுவாமிகள் இப்போது நல்லை ஞான சம்பந்தர் ஆதீனக் குருபீடத்தை அலங்கரிக்கின்றார்கள். சுவாமிகள் வேதாகம புராண இதிகாசங்களையும் சமய சாத்திரங்களையும் வரன்முறையாகக் கற்றுணர்ந்தவர்கள். அவர்களுக்கு சொற்பொழிவு கைவந்த கலை. இசைவளம் அவர்களுக்கு கருவில் திருவாயுள்ளது. அவரது இன்னிசை விரிவுரைகளைக் கேட்போர் பரவசமடைவர். தொல்காப்பியர் முதல் பாரதிவரை மனனம் செய்துள்ளார்.

சங்க நூல்கள், திருக்குறள், இலப்பதிகாரம், கம்பராமாய விழாக்கள் கொண்டாடப் பெறுகின்றன.

சில மாணவர்களுக்கு ஊண், உடை, உறைவிடம் அளித்து முழு நேர சமய வாழ்க்கைக்குரிய பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. ஏழைகளுக்கு அன்னம்பாலிப்பு நிகழ்கிறது.

அருளமுதம் என்னும் ஆதீன சமய சஞ்சிகைக்குத் தாமே ஆசிரியராக இருந்து சுவாமிகள் நடாத்திவருகிறார்கள். இவ்வாறு செந்தமிழுக்கும் சிவநெறிக்கும் முத்தமிழுக்கும் தமிழ் பண்பாட்டிற்கும் நமது சமய நெறி தழைத்தோங்குவதற்கும் சுவாமிகள் செய்து வரும் தொண்டுகள் அளப்பரியது.

### கோயம்புத்தூர் கௌமார மடாலயம் ஆதீனகர்த்தர் தவத்திரு சுந்தரசுவாமிகள்

## ஆசியுரை

சூழநற்கடலார் இலங்கையின் பாங்கர்
தூயநல்லூர் நகரத்தில்
நாளும் இன்னிசையால் தமிழ்தனைப் பரப்பும்
ஞான சம்பந்தர் ஆதீனம்
ஏழிசை வல்ல இன்னிசையாளர்
ஏற்ற நற்பக்தி வைராக்கியம்
சூழிசைச் சாமிநாதப் பேரடிகள்
துலக்கிட நீடு வாழியவே"

## அடியார்கள் பங்கு கொள்க

நல்லை ஆதீனத்தில் இன்று ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளின் 13 வது பீடாரோகண விழா நடைபெறுகின்றது அதையிட்டு மலேஷியா, சிங்கப்பூர், இந்தியா போன்ற நாடுகளில் வதியும் சைவபெருமாளரின் ஆதீனகர்த்தாக்களின் பாராட்டுரைகள் இங்கு இடம்பெறுகின்றன. கார்த்திகை நட்சத்திர தினத்தன்றே இவரின் சிறப்பான விழா நடைபெறுவது வழக்கமாகும். இவ்விழாவில் அடியார் பங்குகொண்டு சிறப்பித்தல் சிறப்பாகும் "குருவே சிவமெனக் கூறினன் நந்தி."

பொன். விஜயானந்தன்
நல்லை ஆதீன கலை கல்வி கலாச்சார சமயப் பணிப் பொறுப்பாளர்.

## இன்றைய விழா நிகழ்சி விபரம்

உதயம் 5 மணி- விஸ்வரூப தரிசனம், ஞானசம்பந்தர் உற்சவம், 6 மணி- திருமுறை விதிபஜனை, 8 மணி பீடாபிஷேகம், 10 மணி- வேதபாராயணம், 11 மணி- திருமுறை ஓதல், 11-30 கார்த்திகை உற்சவம், நண்பகல் 12 மணி- கொலுபூஜை, பிற்பகல் 1 மணி- வாழ்த்திதல் போற்றியுரை, இரவு 7 மணி- பட்டணப் பிரவேசம், 8 மணி- கொலுபூசை, 8-30 மணி- வாழ்த்தியல் போற்றியுரை.

# தெய்வம் தெளிந்த செம்புலச் செல்வர்

சிவப்பெருந் திருவாளர் சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பூர்வாச்சிரமத்தில் திருவேரகம், என்னும், சுவாமிமலை அமைந்துள்ள திருத்தலத்தில் "இருவர்ச்சுட்டிய பல்வேறு தொல்குடி" என நக்கீரர் திருவாய்மலர்ந்தருளியபடி தந்தையார் மரபில் வேதாந்த சித்தாந்த பரிபாலனம் செய்துவந்த பிரம்மஸ்ரீ சேந்திநாத ஐயர் அவர்களையும் செந்தமிழ் இலக்கண இலக்கிய பரிபாலனம் செய்துவந்த வித்துவான் பிரம்மஸ்ரீ கணேசஐயர் அவர்களையும் பேரர்களாகப் பெற்றவர்கள். உலகியற்கலைகளை ஓரளவு பயின்று திருச்சிற்றம்பலவனின் உயர்மதிற்கூட லின் ஆய்ந்த ஒண்தீந் தமிழ்த் துறைகளைக் குற்றமறக் கற்றுணர்ந்து உறவினராகிய தவத்திரு சங்கர சுப்பையரிடம் ஏழிசையும் இசைப்பயனும் பெற்று, தாம் மாணவராக இருந்து கல்விபயின்ற யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலே ஆசிரியப்பணிபுரிந்து ஓய்வுபெற்று சைவசந்நியாசமும் தீக்கைகளும் முறையாகப் பெற்று சென்ற 13 ஆண்டுகளுக்கு மேல் சைவ பரிபாலனம்செய்யும் மடாதிபதியாக விளங்குகிறார்கள். அவர்களது பொருள்சேர் புகழ் இலங்கை, பாரதம், தமிழகம், மலேசியா முதலிய இடங்களில் விளங்குகிறது. பாமரர் முதல் சிறந்த ஆய்வாளர், ஆதீனகர்த்தர்கள் வரை எல்லோரும் உணர்ந்து மகிழ்ந்து பாராட்டும்வகையில் சொற்செல்வமும் உடையவர்கள். உயிரினும் சிறந்த நல்லொழுக்கம், அடக்கம் சிவபூசை முதலியவற்றைக் கடமையாகக்கொண்டுள்ள தெய்வம் தெளிந்த செம்புலச் செல்வர் தெய்வத் தெளிவின், தெளிந்தோர்ப் பேணுமின் எனச் சிலப்பதிகார இறுதியிற் கட்டுரைத்தபடி சான்றோரனைவராலும் பாராட்டிப் போற்றத்தக்கவர்கள்.

இவர்கள் நீலகண்டன் திரு

[7-ம் பக்கம் பார்க்க]

**-- க. வச்சிரவேலு முதலியார் --**
(தருமை, திருவாவடுதுறை ஆதீனப்புலவர்)

## கோலாலம் பூர்நகர முதல்நீதிபதி வாழ்த்து

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளைப் பார்த்தால் அப்பரின் தோற்றமும் ஞானசம்பந்தரின் உள்ளமும் பெற்றவராகத் தெரிகிறது. பாடும்பணியே தன் பணியாகக் கொண்ட ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் தமிழிலும் இந்துமத, சாஸ்திர, ஸ்தோத்திர, புராண இதிகாசத்திலும், திருமுறை, திருமந்றங்களிலும் ஆழ்ந்த விரிந்த கூர்ந்த அறிவுடையவர்கள் அதுமட்டுமல்ல, தம் அறிவை, அனுபவத்தைப் பிறர் புரியும்படி எடுத்துரைக்கும் சொல் சக்தி மிக வாய்ந்தவர்கள் அவரின் தொண்டினால் நாமும் நற்றமிழ் வையகமும் வாழப் பிரார்த்திக்கிறேன்.

செ. நடராசா
[கோலாலம்பூர் நகர முதல் நீதிபதி]

## 2 பெரியார்களுக்கு கௌரவம்

ஆதீனபரம்பரை ஒன்று இற்றைக்கு பதின்மூன்று ஆண்டுகட்கு முன் நல்லூரில் உருவாகியது. அதன் ஞான பீடம் அமைந்து - பீடமேற்ற விழா இன்று நல்லை ஆதீனத்தில் கோலாகலமாக நடைபெறுகிறது இப்பீடாரோகணவிழாவில் வேதநெறி நின்று ஆரியநூல்களை இயற்றிய வண்ணை சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்களும் ஞானத் தமிழ்மூலம் பாராட்டுக்கள் பெற்ற பௌராணிகவித்தகர் இவஸ்ரீ வ. குகசர்மாவும் கொலுமுகத்தில் கௌரவிக்கப் படுவார்கள்.

# இன்றைய அரசியல் நிலைக்கு
# இடைக்காலத் தேர்தல் பரிகாரம் ஆகாது

## சென்னையில் சி. எஸ். கருத்து

சென்னை, ஆக. 14

இன்றைய அரசியல் நிலைக்கு இடைக்காலத் தேர்தலை நடத்துவது ஒரு பரிகாரமாக அமையாது.

இவ்வாறு இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஸி. சுப்பிரமணியம் சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

புதிய அரசு இம்மாதம் 20ம் திகதி லோகசபையின் நம்பிக்கையைப் பெற்றுவிடும் என்றும் கூறிய திரு. சுப்பிரமணியம், உத்தியோக பூர்வ காங்கிரஸ் கட்சிக்குள் கருத்து வேறுபாடு இருந்தபோதிலும் கட்சி ஒற்றுமையாகவே இருந்து வருகிறது என்றும் கூறினார்.

எதிர்காலத்தில் மத்தியிலும் மாநிலங்களிலும் ஒற்றைக் கட்சி அரசு என்பதற்கு இடமே இராது என்றும் திரு. சுப்பிரமணியம் கூறினார். (இ)

## நடிகமணிக்கு பாராட்டு அளிக்க ஏற்பாடு

(தெல்லிப்பழை)

நடிகமணி வி வி வைரமுத்துவின் கலைச்சேவையைப் பாராட்டி விழா எடுத்து பொற்கிழி வழங்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

திரு வைரமுத்துவுக்கு ஐப்பசித்திங்களில் 55 வயது பூர்த்தியாகிறது; இதனையொட்டியே அவருக்கு விழா எடுக்கப்படுகிறது.

யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் தலைமையில் விழாக்குழுவொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. இக்குழுவில் திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம், காரை செ சுந்தரம்பிள்ளை ஆகியோர் இணைச் செயலாளராகவும், ஜெயபாலசிங்கம் அச்சக உரிமையாளர் திரு க ஜெயபாலசிங்கம் பொருளாளராகவும், குழு உறுப்பினர்களாக காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை ஆணை உத்தியோகத்தர் திரு சி இ குணரத்தினம், கவிஞர் வி கந்தவனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த திரு கே எம் வாசகர், திரு கே வி இராசரத்தினம், திரு எஸ் நவரத்தினம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஈ)

## கடவுள் துணையிருக்கும் போது
## பிரதிகூலமான நிலைமைகளால் கேடு ஏற்படமுடியாது
### — பிர. இரத்தினசபாபதி

(யாழ்ப்பாணம்)

"கடவுள் நமக்கு துணையாயிருக்கும்போது பிரதிகூலமானவை என்ன கேடு செய்ய முடியும்? கடவுள் துணை நமக்கு இல்லாது போய்விட்டால் அனுகூலமான நற்றவைகள் நமக்கு என்ன தான் நன்மை செய்ய முடியும்? வாழ்க்கை சம்பந்தமான இரண்டு பெரிய கேள்விகள் இவை. மகாபாரதம் போராட்டத்தின் முடிவே இவ்விரண்டு கேள்விகளுக்கும் விடை தருகிறது"

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம செயலாளர் பிர. இரத்தினசபாபதி, யாழ்ப்பாணம் தாதிமார் பயிற்சிக் கல்லூரியில் 'ஸ்ரீமத் பகவத்கீதை' என்ற தொடரில் விரிவுரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திருமதி வல்லிபுரம் தலைமையில் இவ்விரிவுரை நடைபெற்று வருகிறது. பிர. இரத்தினசபாபதி தொடர்ந்து உரையாற்றுகையில், பாரதப் போரின் முடிவை உதாரணமாக எடுத்துக் கூறினார்

"பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் எவ்விதத்திலும் சமாதானம் உண்டாகவில்லை. முன்னையவர்க்கு உரிய நாட்டில் ஒரு சிறிய பகுதியையும் திருப்பித்தர பின்னையவர் கிறவே மறுத்துவிட்டனர். போர் புரிவதைத் தவிர வேறு வழியில்லை. ஸ்ரீ கிருஷ்ணனுடைய சகாயத்தையே நாடி இருதரத்தாரும் துவாரகைக்குச் சென்றார்கள் அவர்கள் வரும்போழுது கண்ணன் கண் வளர்ந்திருந்தனர். பாண்டவர்களின் சார்பில் இளையவன் அர்ஜுனன் முதலில் பள்ளியறைக்குள் சென்று கேசவனின்

(8-ம் பக்கம் பார்க்க)

## தெய்வம்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

வருளால் பல்லாண்டுவாழ்ந்து சிவநெறியை யாங்கணும் பரப்பும் செங்கதிர்ச்செல்வனாய் விளங்குமாறு ஒற்றைமாவடியில் மூலைத்துத் தழுவக் குழைந்த முதல்வன் சேவடியை வழுத்துகின்றேன்.

## இந்தத்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

னத்தை தமிழுலகம் பெற்றிருக்கின்றது. நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் அருளாட்சி செய்யும் திருவருள் தவத்திரு சுவாமிநாத தேசிக ஞானசம்பந்தர் பரமாச்சாரிய சுவாமிகள் நெறியிலேயே நாளும் இன்னிசையால் சந்தமுத்தமிழ் பரடித் சராசரங்களெல்லாம் சிவம் பெருக்கும் இனிய பணியைச் செய்து வருகின்றார்கள். எளிமையும், சீலமும், தவமும் நிறைந்த சுவாமிகளின் ஞான பீடமேற்ற 13வது ஆண்டு விழா இனிது நிறைவெய்தவும், சுவாமிகளின் திருத்தொண்டு காலத்தைக்கடந்துகாலத்தை வென்றும் விளங்கவும் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

## இன்றைய பலன்

(8ம்பக்கத்தொடர்ச்சி)

**துலாம்:** என்னதான் திறமைசாலியாக இருந்தாலும் இன்று கோட்டைவிட நேரிடலாம். முகமன் பேசுவோரிடம் பழகாது இருக்கவும்.

**விருச்சிகம்:** ஆனந்தமயமான வாழ்க்கை. நண்பர்கள் வருகை உற்சாகப்படுத்தும். களஸ்திரசுகமும் உண்டு. ஒளிமயமான சூழ்நிலை உருவாகும்.

**தனுசு:** விஷப்பரீட்சையின் மூலம் விடர்தங்கள் வினையும் மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடலாம். இன்று சும்மா இருப்பதே சுகம்.

**மகரம்:** தேடிய இன்பம் காலடியில் கிடைக்கும். மூத்தோர்கள் உதவிக்கும் இடமேற்படும். சிலருக்கு தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும்.

**கும்பம்:** உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும் கிடைக்கும். உற்சாகமாகக் கடமையாற்றுவீர்கள். உவகை சேரும்.

**மீனம்:** வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல வழிகளிலும் முயற்சி செய்வீர்கள். புதுமையான செய்திகள் கிடைக்கக்கூடும். புதிய தொழில் துறை ஒன்றில் வாய்ப்புக் கிடைக்கலாம். முன்னேற்றத்துக்கு இடமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


**REGAL** (Jaffna)
Daily 10-30 a. m. 2-00, 4-30, 7-00 p.m. only
No Passes Please
**THE OMEN**
Twentieth Century Fox presents
GREGORY PECK—LEE REMICK
விநாடிக்கு விநாடி உங்களை மெய்சிலிர்க்க வைக்கும் பயங்கரப் படம்.
"ஆவிகளின் அட்டகாசம்"
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
(FOR ADULTS ONLY)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, [illegible] & 9-45.
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
**ஔவையார்**

வின்சர் (யாழ். நகர்) போன் 7698 தினசரி 4 காட்சிகள்
**கல்யாணபரிசு**
(புதிய பிரதி)

Daily 5 Shows
**SHANTHI** JAFFNA Phone: 7642
— N-B: ALTERED SHOW TIMES —
Daily 10-30 2-15, 4-45, 7-15, & 9-45
**ஒடெஸ்ஸா பைல்**
THE ODESSA FILE Scope-Color
எகிப்திய - இஸ்ரேல் யுத்தகளத்தில் இக்கதை ஆரம்பமாகிறது!
அமெரிக்க அதிபர் கென்னடி சுட்டுக்கொல்லப்பட்ட தருணமும் இதுவே!!
2ம் உலக யுத்தத்தின் பின்பு சிறையிலிருந்து தப்பி தலைமறைவான 'ரோச்மன்' - சர்வாதிகாரி ஹிட்லரின் ஆணவமே உருவான கொலையாளி. இவன் அமைக்கும் 'ஒடெஸ்ஸா' - பயங்கரவாத இயக்கம், யூதர் இனத்தையே நிர்மூலமாக்கத்திட்டம் வகுக்கின்றது.
இப்பட நாயகன் - "ஜோன்வொயிட்" - ஜெர்மனிய இளம் பத்திரிகையாளன் பீற்றர் மில்லர்!
ஒடெஸ்ஸா இரகசிய பைலைப் பெறச்சாகசங்கள் புரியும் பீற்றர் மில்லர் வெற்றி காண்கிறாரா?
ரோச்மனின் கதி என்ன...?

ராணி (யாழ். நகர்) கடைசி வாரம
சிவாஜி-ஜமுனா
**நிச்சய தாம்பூலம்**
(புதிய பிரதி)

**SRIDHAR**-Jaffna ஸ்ரீதர்
at 10-30 a m, 3-00, & 7-30 p m.
The Greatest Family Entertainment of all Times.
Bring the Young ones - They will Like it.
CECIL B DEMILLE'S
பிரமாண்டமான வெளியீடு!
**TEN COMMANDMENTS**
**பத்துக் கட்டளைகள்**
(புதிய டெக்னிக் கலர்—ஆங்கிலம்)
Color
Starring ; Two Great Stars
CHARLTON HESTON — YUL BRYNNER
SEE THE PARTING OF THE RED SEA
THE MOST SPECTACULAR SCENE
EVER FILMED
செங்கடல் இரண்டாகப் பிரியும் காட்சி தத்ரூபமாகப் படமாக்கப்பட்டுள்ளது

மனோகரா (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
எம். ஆர். ராதா - சௌகார்ஜானகி நடித்த
**நல்ல இடத்து சம்பந்தம்**

மாதர் குலத்தின் அன்பானவேண்டுகோளுக்கு இணங்கி மீண்டும் 17ந் திகதி முதல்
**சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்**
(கலர்)
பார்த்தவர்கள் பார்க்காதவர்களுக்கு ஐயப்பனின் வரலாற்றைக் கூறி அவர்களுக்கும் மணிகண்டன் அருள் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பத்தை அளித்த உங்களுக்கும் ஐயப்பன் அனுக்கிரகம் உண்டாகும்.
இதுவே கடைசி சந்தர்ப்பம்.
சாமிசரணம் ! ஐயப்ப சரணம் !!

**RIO** (Jaffna-TownHall) Phone: 7607
Daily 10-30, 4-45, 7-00, 9-30 P M.
Ryan O' Neal
Bruce Dern in
**DRIVER**

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
**இன்ஸ்பெக்டர் மனைவி**

**வெல்லி**
காங்கேசன்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன் - ஜெயலலிதா
**சூரியகாந்தி**

**வின்சர்** (யாழ்ப்பாணம்) போன்: 466
தினசரி 3 காட்சிகள்
10-30, 2-00, 6-00,
சோபன்பாபு - விஜயலலிதா நடித்த
**ரிவோல்வர் ரீட்டா**

ராஜா (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் - பாரதி நடித்த
**எங்க பாப்பா**
(புதிய பிரதி)

## நவஇந்தியாவின் ..

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

தலைமையிலான ஜனதா அரசாங்கத்தில் உள்துறை அமைச்சராகப் பதவியேற்றார்.

ஆடம்பரமற்ற சாதாரண வாழ்க்கையை பெரிதும் விரும்பும் பிரதமர் சரண்சிங் தனது 76 வயதிலும் இளமையான அரசியல் கொள்கைகளைக் கடைப்பிடித்து வருகின்றார். தனது ஓய்வு நேரங்களை வாசிப்பதிலும், எழுதுவதிலும் செலவிடும் பிரதமர் சரண்சிங் ஓர் சிறந்த எழுத்தாளர் ஆவார்.

ஸ்ரீமதி காயத்ரி தேவியை மணந்த பிரதமர் சரண்சிங்கிற்கு ஒரு புதல்வனும் ஐந்து புதல்விகளுமுள்ளனர்.

## கடவுள்...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

கால்மாட்டில் நின்றுகொண்டிருந்தான். கௌரவர்களுள் மூத்தவன் துரியோதனன் பின்பு வந்து தலைமாட்டில் உட்கார்ந்து கொண்டான். கண் விழித்ததும் கால்மாட்டில் நின்ற குந்திமைந்தனைக் கேசவர் பார்த்தார். பேச்சு நடந்தது. பாண்டவர்க்குத் துணை புரிவதாகப் பகவான் ஒத்துக்கொண்டார். பின்பு துரியோதனனிடமிருந்தும் அதே விண்ணப்பம் வந்தது. தாம் ஒரு பக்கமும் தமது சேனை மறுபக்கமும் சேர்வதாக ஸ்ரீ கிருஷ்ணன் முடிவு கட்டினார். அர்ஜுனன் கிருஷ்ணனுடைய சகாயத்தையும், துர்யோதனன் சேனையின் உதவியையும் பொறுக்கி யெடுத்தார்கள். கடவுள் நமக்குத் துணையாயிருக்கும் போது பிரதிகூலமான மற்றவைகள் நமக்கு என்ன கேடு செய்யவல்லன?'' என்றார். [ஈ]

## சுவீப் முடிவுகள்

[கொழும்பு]

நேற்றுமுன்தினம் அதிர்ஷ்டம்பார்க்கப்பட்ட 73-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு!

முதலாவது பரிசு
**06 J 0789**
ரூபா 100,000-00

இரண்டாவது பரிசு
**27 B 0224**
ரூபா 40,000-00

மூன்றாவது பரிசு
**10 B 0171**
ரூபா 10,000 00

தலா 1,544 ரூபா 34 சதம் ஆறுதல் பரிசுபெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு?

| | |
|---|---|
| 03 A 0256 | 03 A 0633 |
| 07 A 0566 | 14 A 0317 |
| 21 A 0403 | 30 A 0523 |
| 01 B 0191 | 02 B 0909 |
| 09 B 0341 | 15 B 0053 |
| 22 B 0227 | 27 B 0142 |
| 28 B 0362 | 18 C 0631 |
| 29 C 0248 | 07 D 0095 |
| 07 D 0623 | 07 D 0765 |
| 11 D 836 | 11 D 0833 |
| 21 D. 0109 | 11 E 0522 |
| 19 E 0751 | 20 E 0684 |
| 24 E 0432 | 02 F 0136 |
| 06 F 0336 | 05 G 0847 |
| 16 G 0163 | 28 G 0021 |
| 29 G 0505 | 30 G 0305 |
| 09 H 0944 | 14 H 0915 |
| 18 H 0650 | 21 H 0496 |
| 28 H 0184 | 10 J 0218 |
| 13 J 0723 | 19 J 0904 |
| 32 J 0620 | 07 K 0974 |
| 08 K 0322 | 30 K 0797 |
| 31 K 0915 | 13 L 0372 |
| 19 L 0592 | 22 L 0022 |
| 30 M 0632 | 31 M 0933 |
| 23 N 0575 | 28 N 0463 |
| 04 O 0918 | 16 O 0363 |
| 23 O 0930 | 09 P 0315 |
| 22 P 0738 | 28 P 0028 |
| 29 P 0524 | 31 P 0265 |
| 06 Q 0287 | 08 Q 0276 |
| 12 Q 0085 | 16 Q 0203 |
| 29 Q 0247 | 09 R 0624 |
| 12 R 0163 | 14 R 0735 |
| 21 R 0426 | 22 R 0886 |
| 03 S 0379 | 09 S 0143 |
| 12 S 0194 | 28 S 0802 |
| 31 S 0190 | 19 T 0845 |
| 27 T 0759 | 05 U 0815 |
| 15 U 0090 | 16 U 0716 |
| 25 U 0301 | 32 U 0611 |
| 01 V 0843 | 12 V 0542 |
| 13 V 0103 | 13 V 0159 |
| 06 W 0857 | 18 W 0078 |
| 01 X 0771 | 14 X 0516 |
| 23 X 0824 | 24 X 0903 |
| 09 Y 0211 | 28 Y 0289 |
| 24 Y 0547 | 19 Z 0470 |
| 20 Z 0051 | 20 Z 0601 |
| 21 Z 0113 | 24 Z 0026 |

[இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்] [இ]

## இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

கடந்த ஐந்தாண்டுகளாக, ஒஸ்மானியாக் கல்லூரி அதிபராகப் பதவிவகித்த ஜனாப் ஏ. எச். ஹாமீம் இன்று முதல் சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு உதவி ஆசிரியராக இடமாற்றம்பெற்றுள்ளார். [டெ]

## பல்துறைகளிலும்..

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

லட்சத்து 60 ஆயிரம் தொன்னாகும்.

°° மின் உற்பத்தி 11.4 வீதம் அதிகரித்தது. இதில் சகல பிரிவுகளிலும் பரவலான முன்னேற்றம் காணப்பட்டது.

1977-78ல் வெளிநாட்டு செலாவணி சேமிப்பு அதிகரிப்பு 17000 கோடியை எட்டியது.

## காங்கிரஸ்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யைச் சந்தித்த அமெரிக்க காங்கிரஸ் தூதுக்குழுவினரை இவர்களின் விருப்பத்துக்கிணங்க திரு அமிர்தலிங்கமும், திரு சிவசிதம்பரமும் பாராளுமன்றச் சபைக்கு அழைத்துச் சபையைக் காண்பித்தனர்.

பகிஷ்கரிப்புக்கு

பின்னர்

பாராளுமன்றப் பகிஷ்கரிப்புக்குப் பின்னர் திரு அமிர்தலிங்கம் தமது பாராளுமன்ற அலுவலகத்திற்கு நேற்றுத்தான் முதற்தடவையாக வந்திருந்தார்.

சந்திப்பு முடிந்ததும் உடனடியாகவே திரு. அமிர்தலிங்கம் தமது அலுவலகத்தை விட்டுச் சென்றுவிட்டார். [ம]

## தவறணை உடைத்து திருட்டு

[மாவிட்டபுரம்]

கீரிமலைவீதியில் கள்ளுத்தவறணை இரவு நேரத்தில் இனந்தெரியாதவர்களால் உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் 113ம் இலக்க கிளையான இத்தவறணையிலிருந்து 4 பரல்கள், வாளிகள் உட்பட 1000 ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இதுகுறித்து காங்கேசன்துறை பொலிஸில் செய்யப்பட்ட புகாரையடுத்து பொலிசார் விசாரணையில் இறங்கியுள்ளனர். [அ]


## மரண அறிவித்தல்

### திரு. தில்லைநடராசா புஷ்பராசா

மானிப்பாயைச் சேர்ந்தவரும், நட்டாங்கண்டல் பாடசாலை ஆசிரியருமான தில்லைநடராசா புஸ்பராசா அகாலமரணமானார். இவர் தில்லைநடராசா, புஸ்பமலரின் அன்புமகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் மயூரன், கருணாகரன் ஆகியோரின் தந்தையும் இராசமலரின் சகோதரருமாவார். பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று [15-8-79] நண்பகல் 12 மணிக்கு தலைரவீதி, இணுவிலிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 3306

## மரண அறிவித்தல்

### திருமதி வெற்றிவேலு சின்னம்மா

நாவற்குழியைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்தையா வெற்றிவேலுவின் தர்மபத்தினி சின்னம்மா காலமானார். இவர் பொன்னம்பலம் சரஸ்வதி, குமாரசாமி (திருஞானம் ஒடிற்றேஸ், யாழ்ப்பாணம்) கலாநிதி திருஞானசம்பந்தர் (திருஞானம் ஒடிற்றேஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, பூமணி, மனோன்மணி [திருஞானம் ஒடிற்றேஸ், யாழ்ப்பாணம்] ஆகியோரின் மாமியாரும், திலகநாதன் [உதவி முகாமையாளர், இலங்கைவங்கி மத்திய அலுவலகம் கொழும்பு], தில்லைநடேசன் [நிர்வாக உதவியாளர் நெல்சந்தைப்படுத்தும் சபை, மட்டக்களப்பு], இந்திராவதி [திருஞானம் ஒடிற்றேஸ், யாழ்ப்பாணம்] மனோகரன் [ஒஸ்மானியாக் கல்லூரி], சிவகுமார், சபேசகுமார், குமாரிகா, திருக்குமாரன், திருக்குமாரிகை ஆகியோரின் பேத்தியும், மீனாம்பிகை, சிவகாந்தி ஆகியோரின் மாமிப் பேத்தியும், திலானி, திலீபன், ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று [15-8-79] மாலை 4-00 மணிக்கு நாவற்குழி மயானத்திற்கு 35, கேரதீவு வீதி, நாவற்குழியிலுள்ள இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருஞானம்ஸ்

3304

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் பொன்னம்பலம்

தாவடி சித்த வைத்தியர் ஆறுமுகம் பொன்னம்பலம் [பரமுவைத்தியர்] 13-8-1979ல் காலமானார். இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும், டாக்டர் ஆறுமுகராஜா [லண்டன்], டாக்டர் இராமநாதன் [கிராமாட்சி மன்ற வைத்தியசாலை நீர்வேலி, பகுதிநேர விரிவுரையாளர், லங்கா ஆயுர்வேதக் கல்லூரி], விவேகானந்தன் [கோட்டையம் மருத்துவக் கல்லூரி இந்தியா], மகேஸ்வரி, புவனேஸ்வரி, சுஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், அரியரட்ணம் [உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் உடுவில்], நவரத்தினராஜா [சென். பெனடிக் கல்லூரி கொட்டாஞ்சேனை], சத்தியமூர்த்தி, அரசாங்க நிலஅளவையாளர் திருக்கோணமலை], சத்தியலீலா [லண்டன்], கலைவாணி [விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்] ஆகியோரின் மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

3305

## மயூரா சின்டிக்கேட் (MAYURA SYNDICATE)

ஸ்தாபனத்தாரின்

யாழ் மாவட்ட ஏகவிநியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### லிங்கம் சில்க் ஹவுஸ்

18. நவீன சந்தை யாழ்ப்பாணம்.

| | | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|---|
| ஜில் (GIL) | பெல்ஸ் | ரூபா 160/- | ரூபா 140/- |
| கொட்டு ரேய் (CORDUROY) | ஜீன்ஸ் | ,, 190/- | ,, 175/- |
| டெனிம் (DENIM) | ஜீன்ஸ் | ,, 165/- | ,, 160/- |
| டெனிம் (DENIM) | ஸ்கேட் | ,, 125/- | ,, 110/- |
| மயூரா (MAYURA) | பெல்ஸ் (பெண்கள்) | ,, 145/- | ,, 130/- |
| சேட் வகைகள் | | ,, 85/- | ,, 65/- |
| சேட்டுகள் (GIL) | (சிறுவர்) | ,, 100/- | ,, 80/- |

3303 இன்றே உங்கள் தேவையை பூர்த்தி செய்ய நாடுங்கள்

பால்மாவுத் தட்டுப்பாட்டை நீக்கவும்,
வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும்,
பேசலந்து தேசத்து, கோர்ரெக்ஸ் பொல்கோம் வார்சோ நிறுவனத்திலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட ஆடைநீக்கிய பால், விற்பனைக்கு வந்துவிட்டது.

**SAIFSKIM** சாய்(F)ஸ்கிம்
[SKIMMED MILK POWDER]

சுவையானது, போஷாக்குநிறைந்தது.
[மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்]

**RINNAI** றின்னை
[ஜப்பானில் தயாரிக்கப்பட்டது]

காஸ்-குக்கர்கள், காஸ்-ஓவன்கள், காஸ்-அடுப்புகள்
இலாபகரமானது - சுலபமானது.
பற்பல தினிசுகளில் பார்வையிட எமது காட்சியறைக்கு விஜயம் செய்யுங்கள்!

இறக்குமதியானது
Preserved Apples

வட இலங்கையின் ஏகவிநியோகஸ்தர்களும் இறக்குமதியாளரும்

### முகமதலி அப்துலலி

இல: 5-7 பெரியகடை - யாழ்ப்பாணம்.
போன்: 515 தந்தி: ''சுவைய்''


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No. 49, Teegram: Eelanadu T Phon: 389.